# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE NO.I, USILAMPATTI.

Calendar

Miscellaneous Preliminary Register — CASE No: C.C. No. 244/13

Sessions

| | | |
|---|---|---|
| Deposition of witness of | : | P W - 12 |
| Name | : | Maran |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 19.12.18

முதல் விசாரணை:

நான் தற்போது காவல்துறையில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து ஓய்வு பெற்று உசிலம்பட்டியில் குடியிருந்து வருகிறேன். கடந்த 9.2.13ம் தேதி உசிலம்பட்டி தாலுகா காவல் நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணிபுரிந்தபோது வாகன விபத்து ஏற்பட்டதாக உசிலம்பட்டி அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த அறிவு என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அந்த வாக்குமூலத்தின் அடிப்படையில் அன்றே 21.30 மணிக்கு நிகுஎண்: 30-13 பிரிவு 279, 337 இதசவாக வழக்கு பதிவு செய்தேன். அந்த முதல் தகவல் அறிக்கை அதசாஆ 4. பின்பு வழக்கு கோப்பை சார்பு ஆய்வாளர் பார்வைக்கு வைத்தேன். சார்பு ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

கு.வி.

புகார் வாக்குமூலமாக கொடுக்கப்பட்டது. சம்பவம் இரவு 7.00 மணிக்கு நடந்ததாக சொல்லப்பட்டுள்ளது. புகார்தாரர் பேருந்தில் எந்தபக்கம் மா்ந்ததாக குறிப்பிட்டு

சொல்லப்படவில்லை என்றால் சரிதான். எந்த வாகனத்தை பேருந்து முந்திச் செல்ல முயற்சித்தது என்று புகாரில் சொல்லவில்லை என்றால் சரிதான். வேகத்தின் அளவு குறிப்பாக சொல்லவில்லை என்றால் சரிதான். புகார்வாக்குமூலத்தில் அசா1ஐ தவிர வேறு யாரும் கையெழுத்திடவில்லை.

ம.வி.இல்லை.

/Sd./ Maran

Taken down be me in open court
Read over to the witness in the
presence of accused and admitted
by HIM correct.

/Sd.. M. Udhayavelavan,
District Munsif cum Judicial Magistrate No.I,
Usilampatti.

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE NO.I, USILAMPATTI.

Calendar

Miscellaneous
Preliminary Register

CASE No: C.C. No. 244/13

Sessions

| | | |
|---|---|---|
| Deposition of witness of | : | P W - 13 |
| Name | : | Senthamarai |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 19.12.18

முதல் விசாரணை:

நான் தற்போது விருதுநகர் மாவட்டம் ஊரக காவல் நிலையம் விருதுநகரில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 9.2.13ம் தேதி உசிலம்பட்டி தாலுகா காவல் நிலையத்தில் ஆய்வாளராக பணிபுரிந்தபோது 21.30 மணிக்கு சிறப்பு சார்பு ஆய்வாளர் பதிவு செய்த குற்ற எண் 30-13 பிரிவு 279, 337 இதச வழக்கை நான் எனது மேல்விசாரணைக்கு எடுத்துக் கொண்டு சம்பவ இடம் 22.30 மணிக்கு சென்று சாட்சிகள் பரமசிவம், தெய்வம் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டுபார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்தேன். அந்த வரைபடம் அதசாஆ 5. பின்பு சாட்சிகள் அறிவு, பரமசிவம், தெய்வம் மற்றும் சிறப்பு சார்பு ஆய்வாளர் மாறன் ஆகியோர்களை விசாரணை செய்து தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்பு விபத்தில் காயமுற்றத அய்யனார் என்பவர் 10.2.13ம் தேதி மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனையில் 5.00 மணிக்கு இறந்து விட்டதால் வழக்கின் சட்டப்பிரிவினை இதச பிரிவு 279, 337, 304(அ) பிரிவு மாறுதல் செய்து அறிக்கை தயார் செய்தேன். அந்த அறிக்கை அதசாஆ 6. பின்பு வழக்கு கோப்பினை ஆய்வாளர் பார்வைக்கு வைத்தேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

கு.வி.

சம்பவ இடம் உசிலம்பட்டியின் வெளியில் 4 கிமீட்டர் தொலைவில் உள்ளது என்றால் சரிதான்.சம்பவ இடத்தில் தெருவிளக்கு இருந்ததாக குறிப்பிடவில்லை என்றால் மின்கம்பம் உள்ளதாக கூறியுள்ளேன். ஆனால் அதில் மின்விளக்கு இருந்ததாக குறிப்பிடவில்லை. மேற்கேயிருந்து கிழக்காக எதிரி வாகத்தை ஓட்டிச் சென்றதாக கூறப்பட்டுள்ளது. முன்னால் சென்ற வாகனத்தினை முந்தி சென்றபோது எதிரே வந்த டிராக்ட்ரின் டிரெயிலரில் மோதியதாக கூறப்பட்டுள்ளது. டிராக்டர் நேரடியாக மோதியதாக சொல்லப்படவில்லை. மேற்கேயிருந்து கிழக்கே செல்லும் வாகனங்களுக்கு இடதுபுறம் என்பது சாலையின் வடபுறம்தான். வரைபடத்தில் சாலையின் மைய பகுதியில் உள்ள கோட்டை தாண்டி தெற்குபகுதியில் சம்பவ இடம் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அசா1 என்னுடைய விசாரணையில் பேருந்து மோதியவுடன் இடதுபக்கமாக தாறுமாறாக ஓடி காட்டுக்குள் ஓடி நின்றதாக கூறியுள்ளார். வரைபடத்திலும் மகஜரிலும் வாகனம் சாலையின் வடபுறம் காட்டுக்குள் இருந்ததாகவோ விபத்துக்குள்ளான டிரெயிலர் அந்த இடத்தில் நின்றதாகவோ குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.என்னுடைய விசாரணையில் பேருந்தில் எத்தனை பயணிகள் பயணித்தார்கள் என்ற குறிப்பிடவில்லை. பயணிகள் யார் யார் எந்த இடத்தில் அமர்ந்திருந்தார்கள் என்று என்னுடைய விசாரணையில் சொல்லவில்லை. பேருந்தின் எந்த பகுதி டிரெயிலரில் எந்த பகுதியில் மோதியது என்று என்னுடைய விசாரணையில் அசா1 குறிப்பிட்டு சொல்லவில்லை. இழப்பீடு பெறுவதற்காக கொடுக்கப்பட்ட புகாரை எனக்கு கீழ் பணிபுரிந்தவர் பதிவு செய்ய நான் சாட்சிகளின் வாக்குமூலங்களையும் வரைபடம் மற்றும் பார்வை மகஜரையும் நிலையத்திலேயே தயாரித்து முதல்விசாரணையை ஒருதலைப்பட்சமாக முடித்துள்ளேன் என்றால் சரியல்ல.

ம.வி.இல்லை.

/Sd./ Senthamarai

Taken down be me in open court
Read over to the witness in the
presence of accused and admitted
by HIM correct.

/Sd.. M. Udhayavelavan,
District Munsif cum Judicial Magistrate No.I,
Usilampatti.